6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

52. 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 1-11-94-ஆம் நாளிட்ட 242-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

53. சிதம்பரனார் மாவட்டம், தூத்துக்குடி ஏழைகளின் இளைய சகோதரிகள் நடத்தும் முதியோர் பாதுகாப்பு இல்லத்திற்குச் சொந்தமான டி.எண்69/ஏ1106-ஆம் எண் மோட்டார் வண்டியை வாடகைக்கு .அல்லது ஊதியத்திற்கு பயன்படுத்தாமல் தொண்டு நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தும் வரை மேற்சொன்ன மையத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை 16-8-1994 முதல் சாதாரண வரி வீதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 16-8-94-ஆம் நாளிட்ட 936-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

54. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

55. 1993-94-ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது), (தமிழ், ஆங்கிலம்].

மேற்கோள் நூல்

[*1995 மார்ச் 17*

56. 1993–94–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலிட்டுக் கழகத்தின் நாற்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [*1956*–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்].

57. 1990–91–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. *1956*–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

17. தமிழ்நாடு விழிப்புப் பணிக் குழுவின் *1–4–1991* முதல் *31–3–1992* வரையிலான இருபத்தாறாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

18. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்தொன்றாவது அறிக்கை, *1994–95*.

19. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்திரண்டாவது அறிக்கை, *1994–95*.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
தமிழ் ... மன்ற நூலகம்
17 ... 2000
சென்னை-600 009